# 9. தொன்மத் திறனாய்வு

முன்னுரை – தொன்மம்: பல வகைகள் - தொன்மமும் மதங்களும் - தொன்மமும் இலக்கியமும் - தொன்மமும் மொழியும்.

## முன்னுரை

பழம்பெரும் நாகரீகங்களைக் கொண்ட இந்தியா, எகிப்து, கிரேக்கம் முதலிய நாடுகள் எல்லாம் பல்வேறு வகைப்பட்ட தொன்மங்களின் உற்பத்திக் களங்களாகவும் அவைகளைத் தொடர்ந்து போற்றிக் கொண்டாடுபவைகளாகவும் விளங்குகின்றன. கிரேக்கத்தில் சாக்கிரட்டீஸ் இத்தொன்மங்களுக்கு எதிரான கருத்துக்களை முதன்முதலில் முன்வைத்தார். பகுத்தறிவுவாதியான சோஃபிஸ்டுகளும் கிரேக்கத் தொன்மங்களை மனித வளர்ச்சிக்கு எதிரானவைகளாகக் கருதினர். அறிவியல்யுகமாகக் கொண்டாடப்பட்ட 18,19-ஆம் நூற்றாண்டுகளில் தர்க்கம், பகுத்தறிவு என்ற பேரில் இத்தொன்மங்களுக்கு எதிரான கருத்தாக்கங்கள் உருவாக்கப்பட்டன. இவைகளைப் 'பொய்க்கதைகள்' எனப் புறந்தள்ளியது அந்தக் காலக்கட்டம். தமிழ்ச் சூழலிலும் நவீனத்துவச் சிந்தனைகள் பரவிய 30-களில் இத்தொன்மங்களுக்கு எதிரான ஓர் இயக்கமே பெரியாரால் முன்வைக்கப்பட்டது. இவைகளை "வெறும் பொய்மூட்டைகள்" எனக் கருதிய பெரியார், தனது வாழ்நாள் இலட்சியமாகக் கொண்ட 'பிராமண எதிர்ப்பு' என்ற செயல்பாட்டிற்குத் தொன்ம எதிர்ப்பு என்பதை மிகப்பெரிய கருவியாகக் கையில் எடுத்துச் செயல்பட்டார். ஆளுமைச் செழுமை கொண்ட அவருடைய இப்போக்கினால் தமிழகத்தில் என்னைப் போன்று ஒரு தலைமுறையே தொன்மங்களுக்கு வெளியே 'அந்நியன்களாக' வளர்ந்தனர் என்பது மிகவும் ஆர்வம் தரத்தக்க ஒரு வரலாற்றுச் செய்தியாகும். ஆனால் அவ்வளவு

எளிமையாகத் தொன்மங்களை மனித வாழ்விற்கு வெளியே தள்ளி நிறுத்திவைத்துவிட முடியாது என்பதுதான் உண்மையாக நிற்கிறது. நீட்சே என்ற மிகப்பெரிய தத்துவஞானி, 'தொன்மத்தில் நம்பிக்கையிழந்த எந்தவொரு நாகரிகமும் அதன் இயல்பான, வளப்பம் மிக்க படைப்பூக்கத்தை இழந்து நிற்க நேரும்' என்கிறார்.கூடவே கிரேக்க நாகரிகம் அழிந்ததற்கு, அந்நாட்டுத் தொன்மங்களில் மக்களுக்கு இருந்த நம்பிக்கையைத் தகர்த்ததே காரணம் என்றும் கருதுகிறார். (இலக்கியத்தில் தொல்படிவங்கள், ப.9)

## தொன்மம் - பல வகைகள்

உலகத்தின் தோற்றம் பற்றிய கதை; மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பது பற்றிய கதை; காதல் கதை; வெள்ளம், பஞ்சம் பற்றிய கதை; காடு, கடல் பற்றிய கதை; சாவைப் பற்றிய கதை; மாபெரும் வீரர்களின் கதை; பெரும் போர்கள் பற்றிய கதை; ஐம்பெரும் பூதங்கள் பற்றிய கதை என்று உலக நாகரிகம் அனைத்திலும் தோன்றியுள்ள கதைகளைத் தூய தொன்மங்கள் (Pure myths) அல்லது ஆதிகாலத் தொன்மங்கள் (Primitive myths) என அழைக்கின்றனர். பின்னால் தோன்றிய தொன்மங்களுக்கும் அடிப்படையான இத்தொன்மங்களை மானுடவியல் அறிஞர்கள் தங்கள் ஆய்விற்கு மூலப் பொருளாகக் கொள்கின்றனர். மேலும் நாட்டுப்புறக்கதைகள், நீதிக்கான கட்டுக்கதைகள் (புத்த ஜாதகக் கதைகள் போல்வன) வனதேவதை, விலங்குகள் பற்றிய கதைகள் (பாம்புக் கதை போல்வன) விலங்குகளை மனிதமயப்படுத்தும் கதைகள் (பஞ்சதந்திரக் கதைகள்) மாயத்தந்திரக் கதைகள் (விக்ரமாதித்தன் கதை) இதிகாசங்கள் (இராமாயணம், பாரதம்) புராணக் கதைகள் (திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பெரிய புராணம்) முதலிய கதைகளும் சமூகத்தில் நிலவுகின்றன. இக்கதைகளை எல்லாம் தனித்தனியாகக் காலவரிசைப்படிப் பிரித்து அடுக்கிவிட முடியாது. அவைகள் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கின்றன.

## தொன்மங்களும் மதங்களும்

தொன்மங்கள் வெறுக்கப்படக் காரணமாக இருந்தவைகளுள் 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அறிவியல் புரட்சியும் ஒன்றாகும். இப்புரட்சி பற்றி உருவாக்கப்பட்ட அதீத மதிப்பீடு காரணமாக, இத்தொன்மங்களை அறிவியல் அறிவுக்கு எதிரானவைகளாகக் கருதினர். இவைகள் அறிவியலின் வளர்ச்சிக்கு முன்பு, மிக விரைவில் சமூகத்தை விட்டுக் காணாமல்

போய்விடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டன. இந்த இடத்தில், ஆம்ஸ்ட்ராங் நிலாவில் இறங்கிய போது இனிமேல் நிலாவை பற்றிக் கவிஞர்கள் கவிதைபாட முடியாது என்று 1969-இல் நடந்த வாதங்கள் நினைவுக்கு வருகின்றன. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை; அறிவியல் வளர்ச்சியைச் சார்ந்து எழுந்த பகுத்தறிவு இயக்கங்கள், இத்தொன்மங்களை, வரலாறு முழுக்க அறிவியலுக்கு எதிராக இருந்து வரும் மத நிறுவனங்களுக்கு உரியவைகளாகப் பார்த்தமைதான் காரணம்.

முதலில் இத்தொன்மங்களில் வரும் நிகழ்ச்சிகள், கதைத் தலைவர்கள் எல்லாமே சமூக நிகழ்வுகள்; அந்தச் சமூகத்தின் மொத்த சிந்தனை ஆற்றலின் வெளிப்பாடுகள். இதை மார்க்சிம் கார்க்கி இவ்வாறு குறிப்பிட்டார்:-

> புராணங்களிலும், இதிகாசங்களிலும் வெளிப்படுவது ஒரு குறிப்பிட்ட தனிநபரின் தனிச் சிந்தனை அல்ல; மக்களின் கூட்டுச் சிருஷ்டித் தன்மையே ஆகும். (ப.120)

மேலும் எழுதினார்:-

> புராணமும் இதிகாச இலக்கியமும் ஈடிணையற்ற ஆழ்ந்த அழகுடன் (அந்த அழகுக்கு அடிப்படை உருவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் இடையே நிறைவான இசைவு இருப்பதுதான்) விளங்குவதை மனிதக் கூட்டின் பிரமாண்டமான சக்தியைக் கொண்டுதான் விளக்க முடியும். கூட்டு மனப்பான்மையின் முழுமைதான் இந்த இசைவை உண்டாக்கித் தந்தது. (ப.121)

ஆரம்ப காலத்து மனிதம், தான் எதிர்கொண்ட இயற்கையைத் தன் காலத்திய அறிவினால் புரிந்து கொள்ள முயன்ற முயற்சியின் வெளிப்பாடே இத்தொன்மங்களாகும். இயற்கையின் மாபெரும் சக்தியின் முன் மனிதத்தின் இயலாமையை மாத்திரம் அல்ல, மனிதத்தின் கற்பனை ஆற்றலையும், தன் வாழ்க்கை அனுபவத்தின் மூலம் வெடித்த முதல் கலை அமைப்பையும் இத்தொன்மங்கள் வெளிப்படுத்தி நின்றன. எனவேதான் இவைகள் இயல்பாகவே மந்திரம், சடங்கு, கடவுள் ஆகியவற்றுடன் கூடிய ஆதிகால மனிதத்தின் தன்மைகளைப் பெற்று விளங்குகின்றன. இந்தக் காலகட்டத்தில் மதம், மந்திரம், சடங்கு, இலக்கியம், பொருளாதாரம், அரசியல் எனத் தனித்தனியாக எதுவும் உருவாகிவிடவில்லை. கிறிஸ்டோபர் காடுவெல் எழுதினார்:-

> மானுடத்தின் குழந்தைப் பருவத்தில் கவிதையிலிருந்து எவ்வாறு மதத்தைப் பிரிக்க முடியும்; இரண்டுமே பொருளாதாரப் பணிகளைச் செய்தன; சமூகப் பணிகளை ஏற்றிருந்தன. (ப.24)

இத்தன்மையின் காரணமாகவே, பின்னால் வர்க்க சமுதாயம் உருவான போது, தன் மதத்தின் கடவுள் கதையாக இத்தொன்மங்களை எளிதாகக் கைப்பற்றிக் கொண்டது. இத்துடன் தூய தொன்மங்களும் முடிவுக்கு வந்து விட்டன என்று எழுதுகிறார் காடுவெல்.

கிரேக்கத் தொன்மங்களில் பெரிதும் ஈடுபாடு கொண்ட காரல் மார்க்சும் பின்னால் தோன்றிய இலக்கியங்களுக்கு இவைகள் பயன்பட்ட விதத்தை இவ்வாறு எழுதுகிறார்:-

> செவ்வியல்காலக் கலைக்கான விதைகளாகவும், ஆயுதக் கிடங்குகளாகவும் இத்தொன்மங்கள் விளங்கின.

இவ்வாறு தொன்மங்களில் இருந்துதான் மதக் கடவுளுக்கான கதைகள் மாற்றி உருவாக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதை மற்றொரு வழியிலும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். அதாவது தொன்மத்திற்கும் மதத்திற்கும் இரண்டு வகையான உறவு இருக்கிறது. மாயாஜாலம், மந்திரம், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் நிறைந்த ஆதிகால மனிதனின் படைப்பாடு மதத்தை ஒப்பிடும் போது இரண்டும் நெருக்கமாக வருகின்றன. ஆனால் புனிதம், ஒழுக்கம் என்று பேசும் 'நிர்வாக மற்றும் நிறுவனமயமான மதத்தோடு' ஒப்பிடும்போது உண்மையில் மத நிறுவனங்களுக்கு எதிரானவைகளாகவே இத்தொன்மங்கள் இன்றளவும் விளங்குகின்றன. ஆனால் மக்களின் சோகத்தை மூலமாகக் கொண்டும், அவர்களின் சோகங்களை உற்பத்தி செய்வதையே நோக்கமாகக் கொண்டும், மேம்பாலச் சாலைகள் போலப் பல வழியிலும் இயங்கும் மத நிறுவனங்கள் தமக்கு எதிரானவைகளையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

கீழை நாட்டில் இந்துக்களும் பௌத்தரும் வரலாற்றையே புராணங்களாகவும், ஜாதகக் கதைகளாகவும் உருமாற்றினர்; அவற்றில் சமயத் தத்துவங்களைக் குடியமர்த்தினர்; மேலை நாட்டிலும் இப்படித்தான் நடந்தது. எனவேதான் நீட்சே எழுதினார்:-

> உண்மையிலேயே ஏசு சிலுவையில் அறையப்பட்டது, அவரைச்

சிலுவையில் அறைந்தவர்களே அவரைத் தெய்வமாக்கிக் கொண்டாடிய போதுதான்!

வரலாற்றில் ஆளும் வர்க்கம், இப்படித்தான் எல்லாவற்றையும் (அறிவியல் உட்பட) தனக்கு மட்டுமே பணி செய்கிற ஒன்றாக மாற்றிப் படைத்துக் கொள்கிறது. இங்கே மற்றொன்றையும் எண்ணிப்பார்க்க வேண்டும். மதமானது, இத்தொன்மங்களைத் தன்வயப்படுத்தியது, தான் மனித கூட்டுச் சக்தியாய் வரலாற்றில் முற்போக்கான பங்களிப்பை ஏற்றிருந்த காலத்தில்தான்; பின்பு தேங்கிப் போய்ப் பிற்போக்கான பாத்திரத்தை வகித்த காலத்தில், தன் பிற்போக்குக் கருத்துக்களையும் தொன்மங்களுக்குள் செறிவாகத் திணித்துக் கொண்டது என்பதும் உண்மை.

## தொன்மமும் இலக்கியமும்

இன்றைக்குப் பல வழிகளில் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிக்கை முதலிய தொடர்புக் கருவிகள் மக்களை மயக்குவதற்கு மிகக் கொடூரமான முறையில் தொன்மங்களை பயன்படுத்தி வருகின்றன. இன்னும் பெண்ணைச் சந்தேகிப்பது, தீக்குளிக்கச் செய்வது எல்லாம் இவைகள் மூலம் மீண்டும் நியாயப்படுத்தப்படுகின்றன என்பதும் உண்மைதான்; அருச்சுனன் பல மனைவிகளை மணப்பது, ஒருத்தியை ஐவர் மனைவியாகக் கொள்வது ஆகியன எல்லாம் தவறில்லை என்று காட்டப்படுவதும் உண்மைதான்- ஆனால் இவைகளை எல்லாம் சமூகவியல் கண்ணோட்டத்தோடு விளக்கிட வேண்டும். அதைச் செய்ய இவர்கள் தவறுகிறார்கள். நோக்கமும் உண்டு.

ஆனால் உண்மையில் இவைகள் மட்டும் தொன்மத்தில் இல்லை. இன்னும் ஏராளம் பொதிந்து கிடக்கின்றன. அவைகள் கலைக் களஞ்சியத்திற்குரிய குணத்தோடு விளங்குகின்றன. ஏசுவின் கையில் மதவாதிகள் மந்திரக் கோலைக் கொடுத்து குருடர்களுக்குக் கண் கொடுத்தார் என ஏமாற்றும் போது, மெக்சிகோவின் யதார்த்த ஓவியர் ஜோஸ் ஒரோஸ்கோ என்பவர் ஏசுவின் கையில் கோடாலியைக் கொடுத்து "கிறிஸ்து தன் சிலுவையை அழிக்கிறார்" என்று தன் ஓவியத்திற்குப் பெயரிட்டார். அந்த ஓவியம் அதிகார மதவாதிகள் கூறும் ஏசுவை நினைவுபடுத்தவில்லை. மாறாக, உடற்கட்டுள்ள வாழும் மனிதனை, இன்றைய புரட்சியாளனை, மனித சக்தியின் குறியீட்டை நினைவுபடுத்துகிறது. பாஞ்சாலியைத் துகிலுரியும் காட்சியைப் பாரதி தேசியக் கனல் ஊட்டப் பயன்படுத்திக்

கொள்ளவில்லையா? கண்ணகி வாயைப் 'புதிய கருத்துக்களால்' நிரப்பவில்லையா? மதவாதிகளின் இராவணனை எதிர்ப்பதற்கு 'இராவண காவியம்' படைக்கப்பட்டதும் இல்லாமல் ஓர் இயக்கம் பின்னணியில் இருந்ததால் அரக்கன் என்று பரப்பப்பட்ட இராவணன் பெயரையே பல பேர் தன் பிள்ளைகளுக்குச் சூட்டவில்லையா? எனவே மதத்தை எதிர்ப்பதற்கும் இத்தொன்மங்களே தேவைப்படுகின்றன. காரணம், இத்தொன்மங்கள் மத நிறுவனங்கள் போல இறுகிப் பாறையாகிவிடவில்லை. சமூகத் தேவைக்குத் தகுந்தவாறு இளகி வருகின்றவைகளாகவும், சக்தித் திரளாகவும் அமைந்து கிடக்கின்றன. அதனால்தான் காடுவெல் இவ்வாறு எழுதினார்:-

> தொன்மங்கள் உயிர்ப் பொருளாக விளங்குகின்றன. சமூகத்துடன் துடிப்புள்ள உயிர்த் தொடர்பு கொண்டு விளங்குகின்றன. சமூகத்தின் ஒவ்வொரு நுண் கூறுகளுக்குள்ளும் நுழைந்து ஊடுருவிச் செல்கின்றன.

இத்தொன்மங்கள் இவ்வாறு விளங்குவதற்குக் காரணமாக, உளவியல் அறிஞர் யுங் "இத்தொன்மங்கள் மானுட இனத்திற்கே பொதுவான நனவிலிக் கூட்டுமனத்தில் (Collective unconscious) தொல் படிவங்களாகப் படிந்து கிடப்பதன் வெளிப்பாடு" என்கிறார். அதனால்தான் மனிதர்களுக்கிடையே மொழி வேறுபட்டாலும், மொழித் தொடர்பு கொள்ள இயல்கிறது என்கிறார். மேலும் "ஒரு புதிய படைப்பில் தொன்மக் கூறுகள் செம்மையாக அமைந்து விட்டால், அப்படைப்பு கலைத் தன்மையில் குறையுடையதாக விளங்கினாலும் கூட, அது வாசகர்களை மிக எளிதாகக் கவர்ந்து இழுத்து விடுகிறது" என்றும் விளக்குகிறார். மேலும் அவர் தொன்மம் பற்றிக் கூறியுள்ள கீழ்க்கண்ட கருத்துக்கள் தொன்மத் திறனாய்வின் வளர்ச்சிக்குப் பெரும் துணைபுரிந்துள்ளன.

1. கவிஞன் தனது அனுபவத்தைத் திறம்பட வெளிப்படுத்தத் தொன்மங்கள் துணை செய்கின்றன.

2. பெரும் படைப்புக்கள் ஒரு பெருங்கனவு போல நமக்குள் பரவுவதற்குக் காரணம் அவைகள் முழுவதுமாகத் தம்மை விளக்காதது ஒரு காரணம்; மற்றொன்று பன்முகப்பட்ட பொருள் கொண்டிருப்பதாகும்.

3. கனவானது முழுவதும் அடிமனத்தால் (unconscious) உருப்பெறுகிறது

ஆனால் கவிதை அடிமனத்திலிருந்து உருவானாலும் கவிஞனின் அறிவுணர்வால் (conscious) செப்பனிடப்படுகிறது.

4. இவர் கூறிய மற்றொரு முக்கியமான கருத்து, தொன்மங்கள் மனித இனத்திற்கும் முந்தியவைகளாக இருக்க வாய்ப்புண்டு என்பதாகும். அதனால்தான் பகுத்தறிவு இயக்கக் கவிஞராக அடையாளம் காணப்படும் பாரதிதாசன்கூட, சஞ்சீவி பர்வதத்தின் சாரல், கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலைக் காப்பியம், இரணியன் (அல்லது) இணையற்ற வீரன் என்று இத்தொன்மங்களைச் சார்ந்து படைக்க வேண்டியதாயிற்று.

> நாம் எக்காரணம் கொண்டும் முன்னோர்களினதும், பிறநாட்டவரதும் பிதுரார்ஜிதங்களை அவை நிலப்பிரபுத்துவ அல்லது முதலாளி வர்க்கங்களின் படைப்புக்களாக இருந்த போதும், கையேற்க மறுக்கவோ அவற்றில் இருந்து கற்க மறுக்கவோ கூடாது. ஆனால் பிதுரார்ஜிதங்களைத் தமதாக்கிக் கொண்டு, அவற்றை உதாரணங்களாக உபயோகிப்பது, ஒரு போதும் நமது சொந்த சிருஷ்டிகர வேலையின் இடத்தை எடுத்துவிடக் கூடாது... முன்னோர்களிடமும் அந்நியர்களிடமும் விமர்சனக் கண்ணோட்டமின்றி எடுத்து வந்து புகுத்துவதும், அப்படியே பயன்படுத்துவதும் இலக்கியத்திலும் கலையிலும் மிகவும் படைப்பாக்கமற்றதும் தீங்கானதுமாகும்.

என்ற மாவோவின் எச்சரிக்கையும் இந்த இடத்தில் எண்ணிப் பார்க்கத்தக்கதாகும்.

பழைய தொன்மங்களை எந்த விமர்சனமும், புதியது படைக்கும் கண்ணோட்டமுமின்றித் தொலைக்காட்சி பயன்படுத்துகின்ற போது, இன்னொரு பக்கம் அதன் ஆக்கப்பூர்வ பயன்பாட்டை முற்றாக மறுத்துப் புறக்கணிப்பது திராவிட இயக்கத்தின் நோக்கமாக இருக்கிறது. முன்னோர்களிடமிருந்தும், பழமையிலிருந்தும், இலட்சக்கணக்கான ஆண்டுகளில் மனித குலம் சேமித்து வைத்ததிலிருந்தும் எடுத்துக் கொள்ள எதுவும் இல்லை என்று திராவிட இயக்கத்தினர் புறக்கணித்தனர்.

சோசலிச யதார்த்தவாதத்தின் மூல முதல்வராகக் கருதப்படும் கார்க்கியும் நாட்டுப்புறக் கதைகளை வைத்து அழகான சிறுகதைகளைப் படைத்தார். புதுமைப்பித்தனும் அகலிகை கதை உட்பட, பல

தொன்மங்களைத் தன் எழுத்தாற்றலால் மறுபடைப்பு செய்து, தன் புதிய சிந்தனைகளை மரபுமயப்படுத்தினார். இதுபோலவே சங்க இலக்கியத்தில் ஒரு முலை இழந்த திருமாவுண்ணி, இளங்கோ கையில் வணிக குலத்தின் எழுச்சியைக் கூறும் கற்புக்கரசியாக வளரவில்லையா? அதே கண்ணகி, நாயக்கர் காலத்தில், புகழேந்தி கையில் மதுரை சொக்கநாதனை வணங்கிக் கொண்டு, பணத்திற்கு அலையும பரத்தை மாதவியிடம் சண்டைக்குப் போகும் சக்களத்தியாகப் போய் விடவில்லையா? சங்கரதாஸ் சுவாமிகள் படைப்பில், அதே கண்ணகியும் கோவலனும் மூவண்ணக் கொடியின் கீழ் தேசியப் பாடல் பாடவில்லையா? திராவிட இயக்கம் காரணமாகக் கருணாநிதி கையில் அவர்களே தமிழர் தம் பண்பாட்டைப் (?) பறைசாற்றுபவர்களாக மாறி விடவில்லையா? உலகம் முழுவதும் இது போன்ற எடுத்துக் காட்டுக்களை நிறையக் காணலாம்.

எனவேதான் ரெனிவெல்லாக், "உலகப் புகழ் பெற்ற படைப்புகள் எல்லாம், புதிதாகக் கதையை உருவாக்கிப் படைக்கப்பட்டவைகளைவிடப் பழைய தொன்மங்களின் மேல் மறுபடைப்புச் செய்யப்பட்டவைகளாகவே இருக்கின்றன" என்கிறார்.

இத்தொன்மங்களில் வரும் கடவுளர்கள், இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் முதலியவற்றை இலக்கிய 'உத்திகள்' என்றே கொள்ள வேண்டும் - "இலக்கியத்தில் வரும் கடவுளர்கள் எல்லாம் கதையில் வரும் கதை மாந்தர்களே; தெய்வீகத் தன்மைகள் எல்லாம் கலைத் தொழில் வேலைப்பாட்டின் ஒரு கூறே" என்பார் நார்த்ராப் ப்ரை. இவர் மாபெரும் தொன்மத் திறனாய்வாளராக உலகளவில் அறியப்படுகிறார். இவர் கருத்துப்படி மனித இனத்தில் தோன்றியுள்ள எல்லா இலக்கிய வகைகளுமே தொன்மத்தில் இருந்து தோற்றமுற்றவைதான். ஒரு நல்ல திறனாய்வாளன் தொன்மம் எவ்வாறு கவிதையாக ஒவ்வொரு படைப்பிலும் மலர்ந்திருக்கிறது என்பதைக் கண்டு கூறுவதையே தனது பணியாகக் கொள்ள வேண்டும். ஒரு கவிதையைப் பெற்றெடுத்த பெருமை தனிமனிதனான கவிஞனைவிடத் தொன்மத்திற்கே அதிகமாக உரியதாகும் என்றெல்லாம் தொன்மத்தை முதன்மைப்படுத்தும் இவர் கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. தொன்மம் என்பது கடவுளர்களையோ, கடவுளைப் போன்ற மனிதர்களையோ கதை மாந்தர்களாகக் கொண்ட ஒரு கதைதான்.

2. அதன் தோற்றம் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டது.

3. அது இயற்கை இகந்த நிகழ்ச்சிகளைத் தன் சொல் முறையாகக் கொண்டிருக்கும்.

4. அது வனதேவதைக் கதைகளிலிருந்து (Fairy tales) வேறுபட்டது.

5. தொன்மத்திலுள்ள தொல்படிவங்கள் ஒரு கவிதையை மற்றொரு கவிதையோடு இணைக்கும் குறியீடுகள். இக்குறியீடுகள் இலக்கய உலகை ஒருமுனைப்படுத்த உதவும்.

6. தொன்மம், சடங்கு, கனவு, இலக்கியம் ஆகியவை நெருங்கிய தொடர்புடையவை. எனவே ஒரு தொன்மவியல் திறனாய்வாளன் மானுடவியல், உளவியல், சமூகவியல் ஆகிய வளர்ந்து வரும் துறைகள் தருகின்ற சிந்தனைகளைத் தெரிந்திருக்க வேண்டும்.

7. தொன்மம் மனிதர்களின் அனுபவத்தைச் சித்தரிப்பதோடு, அதற்கு விளக்கமும் தருவதால் இது ஒரு கலைக்களஞ்சியம் போன்று கருதத்தக்கது

8. இலக்கியக் கருக்கள் (Literary themes) எல்லாமே தொன்மத்திலிருந்தே தோற்றம் பெற்றன.

இவ்வாறு நார்த்ரோ ஃப்ரை தொன்மவியல் திறனாய்வை இலக்கிய உலகில் மிக நுட்பமான ஒரு தளத்திற்கு எடுத்துச் சென்றவராக விளங்குகிறார்.

## தொன்மமும் மொழியும்

"ஒருமித்த நடவடிக்கையின் பகுதியாகவே மொழி இருக்கிறது" என்பார் கார்க்கி. இதன் பொருள் மனிதக் கூட்டாற்றலின் ஒரு பகுதியே மொழி. இந்த வகையில் தொன்மமும் ஒரு மொழி. வாழ்க்கை அனுபவங்களைக் குறியீடுகளால் பேசுவது தொன்மம் என்பர். இத்தகைய குறியீடுகள் இல்லாமல் மக்கள் நடுவில் மொழித் தொடர்பு என்பது இன்றும் இல்லை.

கிழித்த கோட்டைத் தாண்டமாட்டாள்.
இந்தா போறான் சகுனி.

இந்தா வாரான் விபூஷணன்
பெரிய்ய அரிச்சந்திரன்
கர்ணன் தோற்றான் போ
மன்மதன்னு நினைப்பு
லாரிகளைப் பாரு, யமன் மாதிரி
தலைபோனாலும் வாக்குத் தவறமாட்டான்.
கும்பகர்ணன் மாதிரி கிடக்கிறான் பாரு.

எனவே சமூகப் பிரக்ஞையை உருவாக்கும் மொழியாகவே தொன்மங்கள் விளங்குகின்றன. ஒருவன் அடையும் சமூகப் பிரக்ஞை அவனது இத்தகைய மொழித் திறத்தைச் சார்ந்திருக்கிறது என்பது மட்டுமல்ல, அவன் எத்தகைய சமூகப் பிரக்ஞையைப் பெற வேண்டும் என்று முன்னமே நிர்ணயிக்கும் சக்தியாகக் கூட இத்தகைய மொழி விளங்குகிறது. எனவேதான் உலகத்தில் எந்தப் படைப்பாளியும் இத்தொன்மங்களிடமிருந்து படைப்புத் தளத்தில் மட்டுமாவது விடுபட முடிவதில்லை. மேலும் படைப்புத் தொழிலுக்கே அடிப்படையாக உள்ள எடுத்துரைத்தல் (Narrative) என்ற மனித மனப்பான்மையை இத்தொன்மங்கள்தாம் பிஞ்சு வயதிலேயே உருவாக்கி விடுகின்றன.

மேலும் பக்கம் பக்கமாக விளக்க வேண்டிய செய்திகளை, மொழியில் சாத்தியப்படக் கூடிய அளவிற்கு மிகச் சுருக்கமாக இத்தொன்மங்களைப் பயன்படுத்திச் சாதித்துவிட முடிகிறது. வரதட்சணைக் கொடுமையால் திருமணமே ஆகாது தவிக்கும் பெண்கள் மனச்சீரழிவிற்குள் பிடித்துத் தள்ளப்படும் கொடுமையை,

'இராமன்தான் வரவில்லை,
இராவணர்களுக்குமா பஞ்சம்?'

என்ற இரண்டு வரிகள் மூலம் இரண்டாயிரம் பக்கத்தைத் திறந்துவிட முடிகிறது. படைப்பவனுக்கும் படிப்பவனுக்கும் இடையில் பொதுவான ஒன்றாக இருந்து (Common frame) இத்தொன்மங்கள் செயல்படுகின்றன. மனஓசையில் (ஆகஸ்டு 89) சச்சிதானந்தன் கவிதையில்,

எழிமலா! "அனுமனின் கரங்களில் இருந்து
தவறி விழுந்த இறவாத மலை:

என்ற வரிகள் மூலம் அனுமனை இழுத்து வந்ததால், அந்த மலையின் பேரழகு, பெருவளம் பலவும் இந்திய வாசகன் அனைவருக்கும் புலனாகிவிடவில்லையா? இதற்கெல்லாம் காரணம், பக்கத்தில் கண்முன் உலவுகிற மனிதர்களைவிடப் பழங்கதைகளில் வருகிற மாந்தர்கள் உயிர்த்துடிப்பு உடையவர்களாகவும், அணுக்கமானவர்களாகவும் மக்களுக்கு இருக்கிறார்கள், அவைகளிலுள்ள கலையாற்றல் காரணமாக.

சிறந்த மானுடவியல் அறிஞரான லெவிஸ்டாராஸ் தொன்மங்களை எவ்வாறு வாசிக்க வேண்டும் என்று இன்றைய மனிதனுக்குத் தெரியாமல் போயிற்று என்கிறார். விசாரணைக்கு உட்படுத்தும் பொருள்களில்தாம் தொன்மைக் கால மனிதனுக்கும் இன்றைய மனிதனுக்கும் வேறுபாடு இருக்கிறதேயொழிய, (அவர்கள் கண்ணுக்குத் தெரிந்த பருப்பொருட்களை ஆராய்ந்தனர்; இன்றைய மனிதன் கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பொருள்களை ஆராய்கிறான்) அந்த விசாரணைக்குப் பயன்படுத்தும் தர்க்க அறிவில் எந்த வேறுபாடுகளையும் காண முடியாது என்கிற கருத்தும் இச்சூழலில் கவனிக்கத்தக்கது. மேலும் லெவிஸ்ட்ராஸ் ஒவ்வொரு தொன்மத்திற்கும் ஒரு குறிப்பிட்ட முக்கியமான பொருள் உண்டு என்ற உளவியல் அறிஞர் யுங்-இன் கருத்தை மறுத்தார். இப்படி யுங் கூறுவது பழைய மொழியியல் அறிஞர்கள் ஒவ்வொரு ஓசையும் ஒரு குறிப்பிட்ட பொருளோடு நெருங்கிய தொடர்புடையது என்று தவறாகக் கருதியதைப் போன்றது என்றார். ஏனென்றால் தொன்மமானது பல்வேறு உள்அமைப்புகளைக் கொண்டு பன்முகமாகக் கட்டப்பட்டிருப்பது. காலந்தோறும் பலவிதமான விளக்கங்களுக்கும் அர்த்த வேறுபாடுகளுக்கும் இடங்கொடுக்கக்கூடிய அளவிற்கு இளகிய நிலையில் இருப்பது.

மயாக்கோவெஸ்கி உட்பட, தொன்மங்களைப் பயன்படுத்திக் கொள்வதில் எந்தச் சிக்கலும் இருப்பதாக முற்போக்குப் படைப்பாளிகள் பலரும் கருதியதாகத் தெரியவில்லை; தமிழ்நாட்டில்தான் பண்பாட்டுத் தளத்தில், திராவிட இயக்கங்கள் காரணமாக, இத்தொன்மங்கள் பற்றிய ஒரு தனித்தன்மையான பிரச்சனை எழுந்துள்ளது. இனிமேலாவது முற்போக்குக் கலைஞர்கள், இயக்கங்கள், இந்தத் திராவிட இயக்கம் எழுப்பிய மாயையை, வரலாற்றுப் பின்னணியில் வைத்து விளங்கிக் கொண்டு, தொன்மங்களை சரியான இடத்தில், சரியான விகிதாச்சார முறையில் பயன்படுத்தத் தயங்கக் கூடாது. மக்களை வென்றெடுக்க மக்களிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற கூற்றில் இந்த உண்மைகளும் அடங்கியுள்ளன எனலாம்.

வளமான ஜீவன் ததும்பும் மொழி மக்களிடமிருந்தே உருவாகிறது. அது மக்களிடம் பழங்கதைகள் தொன்ம வடிவங்களாக நிலவுகிறது.. அவர்களின் மொழி இவைகளினூடாகத்தான் பிரவாகமெடுக்கிறது. எனவே தொன்மங்களிடமிருந்து விலகுதல் என்பது மக்களிடமிருந்து விலகுதலையும் குறிக்கும்.

மக்களின் வாழ்வு, எப்போதும் கலைக்கும் இலக்கியத்துக்குமான மூலப் பொருட்களின் ஊற்றாக விளங்குகிறது. அவைகளை எடுத்து, செழுமை செய்து மீண்டும் மக்களுக்கே தரவேண்டிய கடப்பாடு கலைஞர்களுக்கு உள்ளது. கார்க்கி சொன்னார்:-

> முன்பே கிராமியக் கதைகளிலும், கூட்டுக் கதைகளிலும் இல்லாத உலகப் பிரதிநிதித்துவமுள்ள 'மாதிரிப் படைப்பு' ஒன்றைக் கூட தனிநபரின் மேதாவிலாசம் சிருஷ்டிக்க வில்லை; இவை கூட்டுச் சிருஷ்டித் தன்மையின் ஆற்றலை நிதர்சனப்படுத்துகின்றன.

எனவே மனிதக் கூட்டுச் சக்தியை உற்பத்தி செய்யும் இயக்கம் இல்லாமல் தொன்மங்களும் பயன்படா! ஆளும் வர்க்கமும் அதன் மதமும் தாய்மீன் குஞ்சுமீன் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சட்டியில் போட்டு அவித்துத் தின்பதிலேயே ஈடுபட்டிருக்கிறது. பண்பாட்டுத் தளத்தில் பணியாற்றுகிற இயக்கம் சார்ந்த கூட்டுச் சக்தி ஒன்றுதான் தாய்மீன், குஞ்சுமீன் என்று பிரித்தெடுத்து அவைகளுக்கு விடுதலை அளிக்க முடியும்; அத்தகைய விடுதலையில் கண்டெடுக்கப்படும் தொன்மங்கள், மக்களை விடுவிக்கப் பயன்படும்.

## பயன்பட்ட நூல்கள்

1. ஆவ்னர் ஸிஸ், மார்க்சீய அழகியலின் அடிப்படைகள்
2. கார்க்கி, மனித ஆளுமையின் உடைவு
3. நார்த்தராப் ப்ரை, இலக்கியத்தில் தொல்படிவங்கள்
4. க.பஞ்சாங்கம், தொன்மத் திறனாய்வு
5. Anthony Cuthbert.B, Notes on Greek and Roman Mythology
6. Caudwell, Illusion and Reality
7. Levin.A, Some meanings of Myth
8. Narayana Aiyangar, Essays on Indo Ariyan mythology
9. Richard Chase, Quest for Myth
10. Notes on the study of Myth (Essay).

❖